நாள்: 10.03.2026
OS. 231/2020
பெயர் மனோகரன்
வா.சா.1

<u>குறுக்கு விசாரணை</u>

நான் அரசு போக்குவரத்து கழகத்தில் டிரைவராக வேலை பார்த்து தற்சமயம் ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 10 ஆண்டுகளாக நான் ஓய்வில் இருந்து வருகிறேன். நான் பணியில் இருந்தபோது இறுதியாக வாங்கி மாதச்சம்பளம் 30 முதல் 35 ஆயிரம் வரை வாங்கினேன். நான் ஓய்வு பெறும்போது எனது ஓய்வு ஊதிய பலன்கள் சுமார் 25 லட்சம் பெற்றேன். மதுரை மேலூரில் இருக்கும் வீடு எனது சொந்த வீடு ஆகும். வீட்டை தவிர்த்து பூர்வீக சொத்துக்கள் உள்ளது. எனக்க 2 பெண், 1 ஆண் குழந்தைகள் உள்ளன. எனது மகன் கம்பெனியில் வேலை பார்த்து வருகிறான். என் குடும்பம் வசதியான குடும்பம் என்றால் சரிதான். பிரதிவாதி மேலூர் அரசு போக்குவரத்து கழக பணிமனையில் டிரைவராக இருந்தார். நானும், டிரைவராக இருந்தேன். அந்த வகையில் பழக்கம்.

மேலூர்அரசு போக்குவரத்து கழகத்தில் எந்த ஆண்டு ஒன்றாக பணியாற்றினோம் என்றால் ஞாபகம் இல்லை. நானும், பிரதிவாதியும் சுமார் 3 ஆண்டுகள் ஒன்றாக பணியாற்றினோம். எந்த ஆண்டு என்று எனக்கு தெரியாது. வழக்கு கிரைய சொத்தை நான் நேரடியாக பார்த்துள்ளேன். கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்துவதற்கு முன்னரே வழக்கு சொத்துக்களை பார்த்துள்ளேன். ஒப்பந்தம் போடுவதற்கு 1 வாரம் முன்பு கிரைய சொத்தை பார்த்தேன். கிரைய சொத்து வீடு மற்றும் காலி இடம் ஆகும். வீடு சென்டிரிங் போட்டு, அதற்கு முன்பு தகரம் போட்ட வீடாகும். வீட்டிற்கு முன்பக்கம் மட்டும் வாசல் உள்ளது. நான் வீட்டுக்குள் சென்று பார்க்கவில்லை. வீட்டின் தலைவாசல் எந்த திசைநோக்கி இருந்தது என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் ஓய்வு பெற்ற பின்னர் வட்டிக்கு பணம் கொடுத்து வாங்கும் தொழில் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. சின்னமனூரை சேர்ந்த லட்சுமன பெருமாள் மனைவி செல்வராணியை எனக்கு தெரியும். அவரை 10 வருடங்களாக தெரியும். செல்வராணி மூலமாக தான் செல்வக்குமாரை எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு ஏற்பட்ட அவசர தேவைக்காக வட்டிக்கு தான் பணம்

வாங்கி கொண்டு 04.09.2018 ல் கிரைய ஒப்பந்தம் எழுதிக்கொடுத்தார் என்றால் சரியல்ல.

5 லட்சம் பணம் ரொக்கமாக தான் பிரதிவாதிக்கு கொடுத்தேன். வங்கியில் இருந்து எடுக்கவில்லை. கிரைய ஒப்பந்தத்தேதியில் மீதிக்கிரைய தொகை கொடுப்பதற்கு என் கைவசம் பணம் இருந்தது. உண்மையில் கிரையம் முடிக்கவேண்டும் என்ற எண்ணம் இருந்தால் கிரைய ஒப்பந்தத் தேதியிலேயே மீதிக்கிரைய தொகையை கொடுத்து கிரையம் முடித்து இருப்பேன் என்றால் சரியல்ல. என்னிடம் வாங்கிய பணத்திற்கு பிரதிவாதி மாதம் மாதம் வட்டி செலுத்தி வந்தார் என்றால் சரியல்ல.

M SHIVAJI CHELLIAH

Digitally signed by M SHIVAJI CHELLIAH
Date: 2026.03.10 13:05:15 +0530

சார்பு நீதிபதி
உத்தமபாளையம்